# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2015 யூன் மாதம் 23 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

**I.** **தவிசாளரின் அறிவிப்புக்கள்**

**II.** **அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்**

**III.** **செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

**IV.** **மனுக்கள்**

**V.** **கேள்விகள்**

**01.** **கௌரவ ரவீந்திர யசஸ் குமானாயக உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மனிதவலு அத்துடன் தொழில் வாய்ப்பு ,பொறியியல் சேவை அத்துடன் தகவல் மற்றும் வியாபார அமைச்சரிடம் 2015.06.09 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (□/vi (1)15/22)**

அ. மேல் மாகாணத்தின் கல்வி அமைச்சு மற்றும் திணைக்களத்திற்கு உரிய தாபனங்களில் கடமையாற்றிய கல்வி நிர்வாக சேவையின் உத்தியோகத்தர்களில் எத்தனை பேருக்கு 2012,2013,2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் இறக்குமதி தீர்வையற்ற வாகன அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது ?

ஆ. அவ் உத்தியோகத்தர்களின் பெயர்ப் பட்டியலை தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் பிறந்த திகதிகளுடன் இம் மாகாண சபைக்கு சமர்ப்பிப்பீர்களா ?

இ. இல்லையாயின் ஏன் ?

**02.** **கௌரவ எம். ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மனிதவலு அத்துடன் தொழில் வாய்ப்பு , பொறியியல் சேவை அத்துடன் தகவல் மற்றும் வியாபார அமைச்சரிடம் 2015.06.09 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (□/vi (1)15/23)**

அ. நீர் கொழும்பு கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளரானவர் பதவிக்குரிய தகைமையை பூர்த்தி செய்த ஒருவரா ?

ஆ. இப் பதவியை ஒழுங்கான தகைமை உள்ள ஒருவருக்கு வழங்காது, இக் கல்விப் பணிப்பாளருக்கு அப் பதவி வழங்கப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

இ. நீர் கொழும்பு வலயக் கல்விப் பணிப்பாளரின் கல்வித் தகைமை என்ன ?

ஈ. அந் நபருக்குப் பதிலாக தகைமையுள்ள நபர் ஒருவரை பதவியில் நியமிப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களா ?

உ. இல்லையாயின் ஏன் ?

**03.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மனிதவலு அத்துடன் தொழில் வாய்ப்பு , பொறியியல் சேவை அத்துடன் தகவல் மற்றும் வியாபார அமைச்சரிடம் கேட்பதற்கு : (□/vi (1)15/24)**

அ. i. மேமா/கள/கிறிஸ்துராஜ வித்தியாலயத்தின் கட்டடம் மற்றும் காணியின் 2/3 அளவான பகுதி மாவட்ட 306/பீ சர்வதேச லயன்ஸ் களகத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ii. அக்குத்தகைக் காலம் சென்ற வருடத்தில் நிறைவடைந்துள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

iii. இக் காணி மற்றும் கட்டடத்தினை மீண்டும் பாடசாலைக்கு கையளிப்பதற்கு மேல் மாகாணத்தின் உதவி கல்விப் பணிப்பாளரினால் 2015.03.14 ஆந் திகதியும், களனி கோட்டத்தின் உதவி கல்விப் பணிப்பாளரினால் (பாடசாலை நிர்வாகம் மற்றும் சேவை) 2015.02.16 ஆந் திகதியும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஆ. i. பெற்றோர்களும் அதிபர்களும் மற்றும் கல்வி உத்தியோகத்தர்களும் தொடர்ந்து வேண்டுகோள் விடுத்துள்ள போதும் இது வரை அக் காணி மற்றும் கட்டடத்தினை என்ன காரணத்தினால் கையளிக்க நடவடிக்கை எடுக்கவில்லை ?

ii. இவ்வேளையில் பாடசாலையின் ஆரம்பப் பிரிவினை நடாத்திச் செல்ல 20 பர்ச் அளவான காணி ஒன்று மட்டுமே மிகுதியாக உள்ளபடியாலும், கட்டடம் பாழடைந்துள்ளதினாலும் இக் காணி மற்றும் கட்டடத்தினை மீண்டும் பாடசாலைக்கு கையேற்றுக் கொள்வதற்கு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை ?

**04.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மனிதவலு அத்துடன் தொழில் வாய்ப்பு , பொறியியல் சேவை அத்துடன் தகவல் மற்றும் வியாபார அமைச்சரிடம் கேட்பதற்கு : (□/vi (1)15/25)**

அ. i. களனி கல்வி வலயத்திற்கு உரிய கருணாரத்ன பௌத்த ஆரம்ப பாடசாலையில் மூன்றாம் தரத்திற்கு இணைந்ததாக எத்தனை வகுப்புக்கள் காணப்படுகின்றன ?

ii. இவ் வகுப்புக்களில் எத்தனை பிள்ளைகள் காணப்படுகின்றனர் ?

ஆ. i. இப் பிள்ளைகளின் பெயர் வழிக் கோப்புக்கள் (பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் காணப்பட்டவை) யாவும் காணாமல் போய் உள்ளன என உங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதா ?

ii. 2015.06.08 ஆந் திகதி பாடசாலையின் அதிபரினால் மூன்றாந் தர பிள்ளைகளின் பெற்றோர்களை அழைத்து இவ் எல்லாப் பிள்ளைகளினதும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் காணாமல் போய் உள்ளதாகவும், பிரதேச செயலாளர் காரியாலயத்தில் மீண்டும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தினைப் பெற்று ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

iii. அது அவ்வாறு இடம் பெற்றிருந்தால் இது தொடர்பாக விசாரணை ஒன்றை மேற்கொண்டு உரிய பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பீர்களா ?

## VI. வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

## VII. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும்

## VIII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## IX. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

**01. கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ அவர்கள்**

மேல் மாகாணத்தில் இவ்வேளையில் பாடசாலை பிள்ளைகள், பெற்றோர்களிடமிருந்து இடைக்கிடையே நிதி அறவிடப்படுகின்றது, முதலாம் தரம், ஆறாம் தரம், மற்றும் பன்னிரண்டாம் தரங்களுக்காக பிள்ளைகளை ஆட்சேர்க்கும் போதும் அதேபோல், வேறு வகுப்புக்களின் தேவைகளுக்காக பிள்ளைகளிடமிருந்தும் பெற்றோர்களிடமிருந்தும் நிதி சேகரிக்கப்படுவதனால் அவர்கள் மிகவும் கஷ்டத்திற்கு உட்பட்டுள்ளனர் எனவே மேல் மாகாணத்தில் பாடசாலை பிள்ளைகளிடமிருந்தும், பெற்றோர்களிடமிருந்தும் நிதியினைச் சேகரிப்பதை (வசதிக் கட்டணத்தைத் தவிர) நிறுத்த வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை

கருதுகிறது. **(பி/vi (1)14/09)**

**02. கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி அவர்கள்**

“மேல் மாகாண பாடசாலைகளில் முதலாம் தரத்திற்காக பிள்ளைகளை சேர்க்கும் போது பிள்ளைகளையும் பெற்றோர்களையும் பாதிப்புக்கு உட்படுத்தும் தற்போதைய முறையினைத் திருத்தும் தேவை தோன்றியுள்ளது. அதற்காக பிள்ளைகளை பாடசாலைக்கு ஆட்சேர்க்கும் தினம் தொடக்கம் ஒரு மாதம் நிறைவடைய முன் எல்லா வெற்றிடங்களையும் நிரப்பி நிறைவு செய்வது, பாதுகாப்பு பிரிவுகளில் கடமையாற்றுபவர்களின் பிள்ளைகளின் பெயர்ப் பட்டியலை பிள்ளைகள் ஆட்சேர்க்கப்பட்ட தினத்தில் இருந்து மூன்று வாரங்கள் நிறைவடைய முன் மாகாண சபைக்கு கிடைப்பதற்கு வழி செய்தல், அதிகாரத்தில் உள்ள கட்சி உறுப்பினர்களினால் முன்வைக்கப்படும் பெயர்ப் பட்டியலுக்கு இணங்க பிள்ளைகளை ஆட்சேர்க்கும் முறையை இரத்துச் செய்தல்,

நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்ளும் எல்லாப் பிள்ளைகளுக்கும் கிடைக்கப் பெறும் புள்ளிகளுக்கு இணங்க உறுதியான ஆவணம் ஒன்றினை புள்ளிகளின் ஒழுங்கு முறைக்கு இணங்க தயாரிப்பதற்கும், பெற்றுக் கொள்ளப்படும் புள்ளிகளின் ஒழுங்கு முறைக்கு இணங்க பாடசாலைகளுக்கு பிள்ளைகளை சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும், எனவும், இதற்கிணங்க மேல் மாகாணத்தின் பாடசாலைகளுக்கு முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கையை ஒழுங்கு படுத்தி பாடசாலை ஒன்றுக்கு பிள்ளை ஒருவர் சேர்வதற்கு உள்ள மனித உரிமையை மாகாண மக்களுக்கு உறுதிப்படுத்த வேண்டும். என இம் மேல் மாகாண மாகாண சபை கருதுகிறது.” **(பி/vi (1)14/10)**

## X. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2015.06.10 ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.